Crl.Misc.39 GBP. MDU.23

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Calender .. .. Case No.C.C.30 of 2020

Miscellaneous .. ..

Preliminary Register .. ..

Sessions .. ..

Deposition of witness for Prosecution **P.W. 6**

Defence

Court

Name : **சசிக்குமார்**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02th day of September 2021.

02.09.2021

முதல் விசாரணை : ஆரம்பித்த நேரம் பிற்பகல் **05.28** மணி.

நான் திருவரங்கம் கிராமத்தில் குடியிருந்து தற்போது சிங்கபூரில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியும். உள்ளுர்காரர். சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 09.30 மணியளவில் ரவிக்குமார் என்பவரது வயலில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் அந்த இடத்தில் விசாரித்து விட்டு மேப் போட்டார்கள். நான் அதில் சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னுடன் ராமன் என்பரும் கையெழுத்து இட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது

கையெழுத்து என்னுடைய தான். கையெழுத்து மட்டும் அ.சா.2. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சிங்கபூரில் எந்த வருடம் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை பணிபுரிந்து வந்தேன் என்றால் தேதி நினைவில்லை. தாமரைச்செல்வி என்னுடைய அண்ணன் மனைவி ஆவார். சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். போலீசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் என்னிடம் தனியாக வாக்குமூலம் பெறவில்லை. நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் ஆவணத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் இடத்திற்கு நான்கு பக்கத்திலும் யாருக்கு சொந்தமான இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்று எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் எனறால் சம்பவம் நடைபெற்ற அன்றே வாங்கினார்கள். வழக்கு சம்பவம் நடைபெற்று சுமார் 45 நிமிடத்தில் போலீசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் இட்ட ஆவணத்தில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வரைபடத்தை தவிர வேறு எந்த ஆவணத்திலும் போலீசார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய சகோதரர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டுவிட்டு தற்போது அ.சா.1 கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>சாட்சியம் முடிந்த நேரம் 05.39 மணி</u>**

Crl.Misc.39 GBP. MDU.23

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No.C.C.30 of 2020 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

| | | |
|---|---|---|
| | Prosecution | **P.W. 5** |
| Deposition of witness for | Defence | |
| | Court | |

| | |
|---|---|
| Name | : **பாண்டியம்மாள்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02th day of September 2021.

02.09.2021

முதல் விசாரணை : ஆரம்பித்த நேரம் பிற்பகல் **04.48** மணி.

நான் திருவரங்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை தெரியும். உள்ளூர்காரர். சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் காலை 07.00 மணியளவில் வயலுக்கு சென்று வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ரவிக்குமார் மனைவி தாமரைச்செல்வி வயலில் மிளகாய் செடிகளை பார்த்து அழுது கொண்டிருந்தார். அப்போது தாமரைச் செல்வியும், முத்து என்பரும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். மிளகாய் செடிகளை ஒடித்துப் போட்டிருந்ததால் தாமரைச் செல்வி அழுதுக் கொண்டிருந்தார். முத்து என்பவர் தாமரைச்செல்வியை அசிங்க

அசிங்கமாக திட்டினார். எனக்கு பக்கத்திலேயே குமரவேலுவும் இருந்தார். அவரும் ஓடிவந்தார். ஜெயக்குமார், மாரிமுத்து ஆகியோர் வந்து தாமரைச்செல்வி உடன் அடிபுடி ஆகிவிட்டது. நான் தாமரைச்செல்வியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். திருவரங்கம் கிராமத்தில் நான் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நடந்து முடிந்த ஊராட்சி மன்ற தேர்தலில் எங்களது ஊராட்சியில் தலைவர் பதவிக்கு தாழ்ப்பட்ட வகுப்பை சேர்ந்தவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தேர்தல் சமயத்தில் எங்களது சமூகத்திலேயே இரு பிரிவுகளாக பிரிந்து இருந்தோம் என்றால் சரிதான். தேர்தல் சமயத்தில் நான் ஒரு பிரிவினருக்கு ஆதரவாகவும் எதிரிகள் மற்றொரு பிரிவினருக்கு ஆதரவாகவும், இருந்தார்கள் என்றால் சரிதான். நடந்து முடிந்த ஊராட்சி மன்ற தேர்தல் சம்பந்தமாக எங்கள் ஊரில் கொலை வழக்கு ஏற்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்று எனக்கு நினைவில்லை. காலை 09.00 மணிக்கு நடந்தது. தை மாதத்தில் நடந்தது. அ.சா.1 ரவிக்குமார் என்பவர் என்னுடைய மைத்துனர் மகன் ஆவார். போலீசார் என்னிடம் சம்பவஇடத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருக்கு சொந்தமான இடத்தில் நடைபெற்றது என்றால் ரவிக்குமாருக்கு சொந்தமான இடத்தில் சம்பவம் நடைபெற்றது. இவ்வழக்கு குறித்து புகார் கொடுக்க நான் காவல் நிலையத்திற்கு ரவிக்குமாருடன் சென்றேனா என்றால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. சம்பவம் நடந்து முடிந்த பிறகு எவ்வளவு நேரம் கழித்து ரவிக்குமார் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் என்றால் எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடைபெற்ற போது நானும் எதிரி குமரவேலும் எங்கு இருந்தோம் என்றால் நான் என்னுடைய வயலில் இருந்தேன். குமரவேல் அவரது வயலில் இருந்தார். வழக்கு சம்பவங்கள் அனைத்தும் தாமரைச்செல்வி கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர்கள் திட்டும் சத்தம் கேட்டு நான் சம்பவஇடத்திற்கு சென்றேன். என்னுடைய வயலுக்கும் சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 அடி தூரம் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து

என்னுடைய வயல் கிழக்கு பக்கத்தில் உள்ளது. இன்று சாட்சி சொல்ல வரும் போது நீதிமன்றத்தில் என்ன கூறவேண்டும் என்று போலீசார் சொல்லிக் கொடுத்தார்களா என்றால் போலீசார் சொல்லிக் கொடுக்கவில்லை. என்னுடைய மனசாட்சி படி சாட்சியம் அளிக்கிறேன். எதிரிகளுக்கும் எனக்கும் உள்ள ஊராட்சி மன்ற தேர்தல் முன்பகையை மனதில் வைத்துக் கொண்டு அ.சா.1 என்னுடைய மைத்துனர் மகன் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் உண்மைக்கு புறம்பகா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சியம் முடிந்த நேரம் 05.27 மணி**